அவலட்சணமும் சேர்ந்திருக்கிறது. அந்த நிலையை மாற்ற வேண்டும். அதற்குத்தான் மக்கள் பிரதிநிதிகள் இருந்து நடத்த வேண்டுமென்பதுதானேயொழிய, இந்த அரசாங்கத்தின் மீது எப்படியாவது குறை சொல்ல வேண்டுமென்பது அல்ல. ஒரு கட்டத்தில் நாங்களும் உங்களுடன் சேர்ந்து போராடினோம். அது அல்ல பிரச்சினை. இப்படிப்பட்ட காரியங்களைச் செய்து முடிப்பதற்குத் தேர்தலை நடத்த வேண்டும். உங்களுக்குத் தேர்தலில் உண்மையாக பயம் இருக்கிறது என்று நாங்கள் சொல்லவில்லை. பயமோ, இல்லையோ அது போகட்டும். அந்தத் தேர்தலை நடத்துவதற்குரிய முடிவிற்கு வாருங்கள். மாண்புமிகு அமைச்சரவர்களுக்கு நிறைய பொறுப்பு இருக்கிறது. தொழிலாளர் நலத்துறை அமைச்சராக இருப்பதால் நிறைய பொறுப்பு இருக்கிறது. அவர் அந்தத் துறையில் இல்லையென்றால், எங்களுக்குத்தான் கஷ்டம். அந்த இலாகாவை அவரிடம் கொடுத்து இருப்பதனால் அவருக்கு அதிக பொறுப்பு வந்திருக்கிறது. அவர் இன்றைக்குப் பதில் சொல்லும்போது நாங்கள் இந்த மாதத்தில் -தேதிகூட இல்லாவிட்டாலும் பரவாயில்லை. தேதியைச் சொல்ல முடியாது, தேதியை கேபினெட் கூடித்தான் முடிவு செய்ய வேண்டும்–தேர்தலை நடத்தத் தயாராக இருக்கிறோம் என்று அவர் இங்கே சொல்ல வேண்டும். இந்தச் சட்டத்தை நிறைவேற்ற வேண்டாம். நீங்கள் எந்த மாதத்தில் தேர்தலை நடத்தப் போகிறீர்கள் என்பதைத் தெரிவிக்குமாறு கேட்டுக்கொண்டு, என்னுடைய கருத்துக்களைச் சொல்லி இத்துடன் முடித்துக்கொள்கிறேன்.

மாண்புமிகு பேரவைத் துணைத் தலைவர்: இந்த விவாதத்தில் பங்கு கொள்ள பெயர் கொடுத்தவர்கள், நாளை அனுமதிக்கப் படுவர்.

பேரவையின் இன்றைய அலுவல்கள் இத்துடன் முடிவுற்று நாளை (18–11–1986) காலை 9-00 மணிக்குப் பேரவை மீண்டும் கூடும்.

பின்னர் பேரவை பிற்பகல் 1–34 மணிக்கு ஒத்திவைக்கப் பெற்றது.

8. பேரவைமுன் வைக்கப் பெற்ற ஏடுகள்.

(அ) சட்டப்படிக்கான விதிகளும், ஆணைகளும்.

140. தமிழ்நாடு 1978 ஆம் ஆண்டு சங்கங்கள் பதிவுறு விதிகளில் சில திருத்தங்கள் செய்வது குறித்து வணிகவரிகள்–சமய அறக்கட்டளைகள் துறையின் 26–2–1986-ஆம் நாளிட்ட 196 ஆம் எண் அரசாணையில் வெளியிடப்பட்ட அறிவிக்கை. [தமிழ்நாடு 1975 ஆம் ஆண்டு சங்கங்கள் பதிவுறுச் சட்டத்தின் (தமிழ்நாடு சட்டம் 27/1975) 58 (3) பிரிவின் கீழ் பேரவை முன் வைக்கப் பெற்றது.]

1986 நவம்பர் 17]

141. 1985 ஆம் ஆண்டு சென்னை பெருநகர் குடிநீர் வழங்கல் மற்றும் வடிகால் (திருத்த) சட்டம் அமுலுக்கு வரும் தேதியினை நியமனம் செய்வது குறித்து நகராட்சி நிர்வாகம்—குடிநீர் வழங்கு துறையின் 8—7—1986 ஆம் நாளிட்ட 807—ஆம் எண் அரசாணையில் வெளியிடப்பட்ட அறிவிக்கை. [1978-ஆம் ஆண்டு சென்னை பெருநகர் குடிநீர் வழங்கல் மற்றும் வடிகால் (திருத்த) சட்டத்தின் (தமிழ்நாடு சட்டம் 28/1978) 88 (2) பிரிவின் கீழ் பேரவை முன் வைக்கப் பெற்றது.]

142. நகராட்சி மன்றங்கள் வரவு-செலவினங்கள் பற்றிய விதிகளில் திருத்தமொன்று செய்வது குறித்து நகராட்சி நிர்வாகம் குடிநீர் வழங்கல் துறையின் 21-7-1986—ஆம் நாளிட்ட 857:ஆம் எண் அரசாணையில் வெளியிடப்பட்ட அறிவிக்கை. [தமிழ்நாடு 1920-ஆம் ஆண்டு ஊராட்சிகள் சட்டத்தின் (தமிழ்நாடு சட்டம் 5/1920) 304 (2) பிரிவின் கீழ் பேரவை முன் வைக்கப்பெற்றது.]

143. தமிழ்நாடு குழாய்கிணறுகள் கழகத்தின் 1984—85 ஆம் ஆண்டிற்கான மூன்றாவது ஆண்டறிக்கை, 1956 ஆம் ஆண்டு நிறுவனங்கள் சட்டத்தின் (மத்தியச் சட்டம் 1/1956) 619—ஏ பிரிவின் கீழ் பேரவை முன் வைக்கப் பெற்றது].

144. தமிழ்நாடு சர்க்கரைக் கழகத்தின் 1981—82 ஆம் ஆண்டிற்கான எட்டாவது ஆண்டறிக்கை. [1956 ஆம் ஆண்டு நிறுவனங்கள் சட்டத்தின் (மத்தியச் சட்டம் 1/1956) 619—ஏ பிரிவின் கீழ் பேரவை முன் வைக்கப் பெற்றது.]

145. தமிழ்நாடு வனத் தோட்டக் கழகத்தின் 1984—85 ஆம் ஆண்டிற்கான பதினோராவது ஆண்டு அறிக்கையும், கணக்குகளும். [1956 ஆம் ஆண்டு நிறுவனங்கள் சட்டத்தின (மத்தியச் சட்டம் 1/1956) 619—ஏ பிரிவின் கீழ் பேரவை முன் வைக்கப் பெற்றது.]

(ஆ) அறிக்கைகள், அறிவிப்புகள், ஏனைய தாள்கள் ஏதுமில்லை.

[1986 நவம்பர் 17

[·. 1ம் பக்கத்திலுள்ள உடுக்குறியிட்ட வினா 21–க்கான விடையைக் காண்க]

195 கிராம நிர்வாக அலுவலர் பணியிடங்கள் கீழ்க்கண்ட வாறு மாவட்ட வாரியாக காலியாக உள்ளன:—

	மாவட்டத்தின் பெயர்.	நிரப்பப்பட வேண்டிய பணி யிடங்கள்.
	(1)	(2)
1.	சென்னை	1
2.	செங்கல்பட்டு	74
3.	வடாற்காடு	29
4.	தென்னாற்காடு	11
5.	தஞ்சாவூர்	8
6.	திருச்சி	3
7.	புதுக்கோட்டை	5
8.	மதுரை }	
9.	அண்ணா }	4
10.	இராமநாதபுரம்	
11.	காமராஜர்	23
12.	பசும்பொன் முத்து இராமலிங்கம்	
13.	திருநெல்வேலி	9
14.	கோவை	9
15.	பெரியார்	10
16.	சேலம்	..
17.	தருமபுரி	1
18.	நீலகிரி	8
19.	கன்னியாகுமரி	..
	மொத்தம் ..	195

சட்டமன்றப் பேரவை TAMIL NADU LEGISLATIVE ASSEMBLY
வாய்மையே வெல்லும் TRUTH ALONE TRIUMPHS

TAMIL NADU LEGISLATIVE ASSEMBLY

வாய்மையே வெல்லும்

TRUTH ALONE TRIUMPHS